**மழைநீரை சேமிப்போம் !** **பிளாஸ்டிக்கைத் தவிர்ப்போம் !!**

நகராட்சி அலுவலகம்,
தேனி-அல்லிநகரம்.

நாள். 07.03.2019

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2048 மாசி மாதம் 20ஆம் நாள் **07.08.2019 வியாழக்கிழமை** காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற **அவசரக் கூட்டம்** நடைபெறும்.

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி

### பொருள் 01:

தேனி - அல்லிநகரம் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திடும் பொருட்டு, அரசாணை எண். 132 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 28.02.2011ல், ரூ42.09 கோடி மதிப்பீட்டில் (திருத்திய மதிப்பீடு) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டம் - III ன் நிதியின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பணி மேற்கொள்ளப்பட்டு, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 12.05 MLD கொள்ளளவும், பிரதான பம்பிங் நிலையம் 1 எண்ணிக்கையும், உந்து நிலையங்கள் 4 எண்ணிக்கையும் மற்றும் 59.33 கி.மீ நீளத்திற்கு கழிவுநீர் குழாய்கள் பதிக்கப்பட்டு, 08.06.2015ம் தேதி முதல் பயன்பாட்டில் உள்ளது.

மேற்படி திட்டத்தில் தேனி - அல்லிநகரம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்பட்டு விடுபட்ட (Leftout area) வார்டுகளுக்கான 1 பகுதி, 2 பகுதி, 3 பகுதி, 4 பகுதி, 5 பகுதி, 6 பகுதி, 7 பகுதி, 9 பகுதி, 10 பகுதி, 11 பகுதி, 13 பகுதி, 14 பகுதி, 15 பகுதி, 16 பகுதி, 17 பகுதி, 22 பகுதி, 27 பகுதி, 28 பகுதி, 29 பகுதி, 30 பகுதி, மற்றும் 33 பகுதி ஆகிய வார்டுகளும், மேலும் வார்டு எண்கள். 8, 12, 24 மற்றும் 32 ஆகிய பகுதிகளில் ஓரளவு செயல்படுத்தப்பட்ட நிலையில் Uncovered area உள்ள பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கையினை, தனியார் கலந்தாலோசகரை நியமித்து செய்யவும், அதனை PDGF நிதியின் மூலம் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3761/2018/இ3)**

**தீர்மான எண்.1012 அனுமதிக்கப்பட்டது.**

. **<u>பொருள் 02</u>**:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் கீழ்காணும் தெருக்களில் பாதாள சாக்கடை திட்டம் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றிற்கு பைப்லைன் பதிப்பதற்காக சாலைகள் தோண்டப்பட்டதில் சேதமடைந்த சாலைகளை சீரமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கும் மற்றும் நகரின் விரிவாக்கப் பகுதியில் புதியதாக சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கும் கீழ்காணும் மூன்று சிப்பங்களுக்கு மொத்த மதிப்பீடு ரூ.1000.00 லட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தயார் செய்யப்பட்ட விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2019 - 2020 - ன் கீழ் ( TURIP 2019 - 2020 ) பணி செய்வதற்கு உரிய நிர்வாக அனுமதியும், மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| **Package** | **Name of Work** | **Est.Cost ( Rs.In Lakhs)** |
|---|---|---|
| 1 | Formation of BT Road at B - B Scheme road (Ward no : 12), and Relaying of BT Road of Subban main street, Bungalowpatti road, Kakkanji colony west cross streets, Solaimalai ayyanar koil streets, Collectorate camp office road, Annaparaja kalyana mahal road, Pethanachi kalyanamahal road, Karuvelnayakanpatti burial ground & STP road, Kamarajar bus terminal and new compost yard (W12, 29, 26, 24, 32, 33, 15, 33) and laying of Paver block road at Sadayal nagar main road, kurunji nagar west cross street, Sanitory workers quaters inner roads at Ward no: 31, 12 & 03) in Theni - Allinagaram Municipality | 400.00 |
| 2 | Formation of BT Road with Construction of Retaining wall at Kannimar koil Road, and Relaying of BT Road at New South street and Laying of Paver block road at Anna Nagar cross street, Ambedkar nagar cross street and Alagarsamy cross street at Ward no; 02, 03, 09 & 12) in Theni - Allinagaram Municipality | 400.00 |
| 3 | Formation of BT Road and Construction of RCC Culvert at Bothipuram Quarry road ( from Veerappa ayyanar koil road ) at Ward no: 08 Theni - Allinagaram Municipality | 200.00 |
| **Total** | | **1000.00** |

**அலுவலகக்குறிப்பு:—**

1. தேர்வு செய்யப்பட்டுள்ள தெருக்களில் மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட திட்டத்தினை அரசு நிர்ணயிக்கும் நிதிப்பகிர்வில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்கண்ட திட்டத்திற்கு நகராட்சி பங்கு தொகையினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
4. மேற்கண்ட பணிகளுக்கு உரிய திட்ட மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெற்று அதன்படி ஒப்புந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் : 3374 / 2018 / இ1)**
**<u>தீர்மான எண்.1013 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 03</u>:

அரசாணைஎண் .73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள் 26.07.2018ன்படி தமிழ்நாடு மாவட்டநகராட்சி சட்டம் 1920,அட்டவனை 4ல்உள்ளவிதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 33 வரைஉள்ள வார்டுகளுக்கு சொத்துவரி01.04.2018முதல் பொதுசீராய்வு செய்ததை தினபூமி நாளிதழில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | நாளிதழ் | செய்திமக்கள்தொடர்புத்துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினபூமி | தேனிவெ.ஆ.எண்.971/செ.ம.தொ.அ/தேனி/ தேனி/நாள்.10.09.2018 | ரூ.15792/— |

மேற்கண்ட தொகை ரூ.15792/—ஐ(ரூபாய்.பதினைந்தாயிரத்து ஏழுனுற்று தொண்னுற்றிஇரண்டு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u> :**

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2567/2018/அ1)

**<u>தீர்மான எண்.1014 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 04</u>:

இந்நகராட்சி எல்கையில் உள்ள பள்ளி கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்கப்பட்டதை எதிர்த்து நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.(W.P.Nos.13936/2019 & 24981/2018)-ஐ நகராட்சி சார்பாக ஆஜராவதற்கு உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.கே.ஹேமகார்த்திகேயன் அவர்களிடமிருந்து வரப்பெற்ற வழக்கறிஞர் கட்டணமாக ரூ.30,000/- வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகையினை அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு</u> :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1175/2018/அ1)

**<u>தீர்மான எண்.1015 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 05</u>:

தேனி-அல்லிநகரம் நகராட்சியில் செயல்பட்டு வரும் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் தேனி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் உள்நோயாளிகளுடன் வரும் துணையாளர்கள் தங்குவதற்கான சிறப்பு தங்குமிடம் அமைக்கப்பட்டுள்ளது. அச்சிறப்பு தங்குமிடத்தை Bharth Rural Development Social Service Society, தேனி, தொண்டு நிறுவனத்தின் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒரு வருட காலம் பராமரிப்பு பண செய்வதற்கு ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u> :

மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3915/2016/ச.மு)

**<u>தீர்மான எண்.1016 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 06</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான உப்பார்பட்டி உரக்கிடங்கில் தண்ணீர் வசதிக்காக அமைப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிற்கு ஏற்கனவே HDPE HOSE பொருத்தப்பட்ட நிலையில் அடிக்கடி HOSE பழுதுடைந்து விடுகிறது. எனவே மேற்படி HOSE - க்கு பதிலாக GI PIPE பொருத்தும் பணிகள் செய்ய வேண்டியுள்ளதால் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 0.62 இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1) மன்றம் அனுமதிக்கலாம்..
2) மேற்காணும் பணிக்கான செலவினத்தை இந்கராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்: 2065 / 2019 / இ1)

**<u>தீர்மான எண்.1017 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 07</u>:

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2018-19-ம் ஆண்டுக்கான பாராளுமன்ற உறுப்பினர் நிதியின் கீழ் 1 ) தேனி புதிய பேருந்து நிலையம் சாலை ( பைப்பாஸ் ரோடு ஜங்சன் பெரியகுளம் ரோடு மற்றும் மதுரை ரோடு இணையும் இடம் ), 2 ) தேனி நகராட்சி எரிவாயு தகன மேடை வளாகத்திற்கு ஆகிய இரண்டு இடங்களில் 9 மீட்டர் மினி ஹைமாஸ்ட் லைட் அமைக்கும் பணி மேற்கொள்ளுவதற்கான 3வது அழைப்புக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினச்சூரியன் நாளிதழில் மாவட்ட அளவில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | தினச்சூரியன் நாளிதழ் | தமிழ் வளர்ச்சி (ம) செய்தித்துறை வெளியீட்டு ஆணை எண்.82 / ஒப்பந்தப்புள்ளி/ விளம்பரம் / 2019, நாள்.19.06.2019 | 14784 |

மேற்கண்ட தொகை ரூ.14784/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.163/2018/இ1)

**<u>தீர்மான எண்.1018 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள் 08</u>:**

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளில் கீழ்க்கண்டுள்ள இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதனை வருடாந்திர முறையில் பராமரிப்பு செய்ய இந்நகர்மன்றத்தீர்மான எண். 570. நாள். 12.06.2018 ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்நகர்மன்றத்தீர்மான எண். 594. நாள். 18.07.2018 ன் படி வேலை உத்திர வழங்கப்பட்டு பணி நடைபெற்று வந்தது. மேற்கண்ட பராமரிப்புக்காலம் முடிவடைகிறது. பொதுமக்களின் குடிநீர் பயன்பாடு அத்தியாவசிய தேவையாக உள்ளதால் ஆகஸ்ட் –2019 முதல் ஜூலை –2020 வரை தொடர்ந்து பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| வ.எண் | சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் விபரம் | எண்ணிக்கை விபரம் |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையம் மெயின் பிளாக்– 1, செகன்டரி பிளாக்– 1, மற்றும் நகரப்பேருந் நிலையம்–1 | 3 |
| 2 | தேனி பழைய பேருந்து முனையம் | 1 |
| 3 | அம்மா உணவகம் | 1 |
| 4 | நகராட்சி துவக்கப்பள்ளி, பங்களாமேடு, தேனி | 1 |
| 5 | பழைய தாலுகா அலுவலகம் சாலை | 1 |
| 6 | நகராட்சி அலுவலகம் தரைத்தளம்–1, முதல்தளம்–1 மற்றும் இரண்டாம் தளம்.–1 | 3 |
| 7 | டாக்டர். அம்பேத்கார் தெற்குத்தெரு | 1 |
| 8 | நகராட்சி அலுவலர் குடியிருப்பு, பொம்மையகவுண்டன்பட்டி | 1 |
| 9 | நகராட்சி,துவக்க்ப்பள்ளி, அல்லிநகரம். | 1. |
| 10 | ஒண்டிவிரன் காலனி. | 1. |
| 11 | வார்டு எண். 22, நகராட்சி ஆரம்ப சுகாதார நிலையம், தேனி –1 மற்றும் வார்டு எண். 4 நகராட்சி ஆரம்ப காதார நிலையம், அல்லிநகரம்.–1 | 2 |
| **மொத்தம்** | | **16** |

மேற்கண்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக அமைக்கப்பட்டுள்ள 14 சுத்திகரிப்பு கருவிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து தொடர்ந்து பராமரிப்பு பணி மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.9.95 இலட்சம் ( ரூ. ஒன்பது இலட்சத்திதொன்னூற்றி ஐந்தாயிரம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினம் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்..

இ) குடிநீர் விநியோக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் ( பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1948/2019/இ2)

**<u>தீர்மான எண்.1019 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 09</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண். 1 முதல் 13 வரை உள்ள வார்டுகளுக்கு குடிநீர் விநியோகம் வீரப்ப அய்யனார் கோயில் உள்ள பணசலாற்றில் இருந்து வழங்கப்பட்டு வருகிறது. தற்போது மழை இல்லாத காரணத்தினால் ஆற்றில் நீர் வரத்து இல்லை. எனவே, ஆற்றில் உள்ள தடுப்பு அணையில் மண் மேவப்பட்டு தண்ணீ தேங்க முடியாமல் உள்ளது. எனவே மேற்கண்ட மண்ணை அகற்றி கரையில் போடவேண்டி உள்ளது. மேலும் பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய திட்டத்தில் இயல் நீரேற்று நிலையத்தில் உள்ள Intake Well ல் உள்ள சகதியினை அகற்ற வேண்டியுள்ளது. அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 3,00,000/– ( ரூபாய். மூன்று இலட்சம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை முடிப்பதற்கும், மேற்கண்ட உத்தேசச்லவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினம் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2002/2019/இ2)

**<u>தீர்மான எண்.1020 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 10</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான பழனிசெட்டிபட்டி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து குநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது . இதில் பழைய மற்றும் புதிய திட்டத்தில் இயல் நீரேற்று நிலையத்தில் உள்ள Intake Well ல் உள்ள சகதியினை அகற்ற வேண்டியுள்ளது. மற்றும் பழைய, புதிய திட்டத்தில் சுத்திகரிப்பு நிலையத்தில் உள்ள Blaglate ல் உள்ளண சகதியினை அகற்ற வேண்டியுள்ளது. அதற்கான உத்தேசச்செலவினம் ரூ. 2,90,000/– ( ரூபாய். இரண்டு இலட்சத்தி தொன்னூறு ஆயிரம் மட்டும் ) ஆகும். எனவே, மேற்கண்ட பணியினை முடிப்பதற்கும், மேற்கண்ட உத்தேசச்லவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலககுறிப்பு:</u>**

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினம் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2001/2019/இ2)

**<u>தீர்மான எண்.1021 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 11</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.07 வி.எம். சாவடித்தெரு அங்கன்வாடி மையம் அருகில் உள்ள குடிநீர் மேல்நிலைத்தொட்டி உள்ளது . மேற்கண்ட மேல்நிலைத்தொட்டிக்கு தண்ணீர் ஏற்றினால் நீர்க்கசிவு ஏற்பட்டு பழுதடைந்துள்ளது.. மேற்கண்ட மேல்நிலைத்தொட்டி கட்டப்பட்டு சுமார் 50 ஆண்டுகள் ஆகின்றது. மேற்கண்ட மேல்நிலைத்தொட்டி இடிந்து விழும் நிலை உள்ளது. இதனால் அருகில் உள்ள அங்கன்வாடி மையம் சேதமடைய வாய்ப்பு உள்ளது. மேலும் வி.எம்.சாவடி தெரு பத்மநாபன் பள்ளிக்கு அருகில் உள்ள நல்ல தண்ணீர் கிணறு உள்ளது. இது அமைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகிறது. இதனுடைய மோட்டார் ரூம் பழுதடைந்து உடையும் நிலையில் உள்ளது. மேலும் அறையில் இரவில் சமூக விரோதிகளால் மது அருந்துதல் மற்றும் தகாத வேலைகள் நடைபெறுகிறது. தற்போது வைகை அணையில் இருந்து குடிநீர் விநியோகம் செய்யும் பணி நடைபெறுகிறது. எனவே மேற்படி மோட்டார் அறை தேவை இல்லாததாலும் பழுது ஏற்பட்டதாலும் இதனை இடித்து அப்புறப்படுத்த வேண்டி உள்ளது. மேலும் வார்டு எண்.25 பழைய டி.வி.எஸ். சாலையில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் உள்ள மேல்நிலைத்தொட்டி பழுதடைந்து உள்ளது. அதுபோல் வார்டு எண். 1 பஜார் தெரு உள்ள மேல்நிலைத்தொட்டி பழுதடைந்து உள்ளது. மேற்கண்ட மூன்று மேல்நிலைத் தொட்டிகள் இடிந்து கீழே விழுந்தால் பொது மக்கள் மற்றும் குழந்தைகள் உயிர்ச்சேதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே மேற்கண்ட வார்டு பொது மக்கள் மற்றும் குழந்தைகள் உயிர்சேதம் ஏற்படா வண்ணம் மேற்கண்ட மூன்று மேல்நிலைத்தொட்டிகள் இடித்து அப்புறப்படுத்தவேண்டியுள்ளது.. எனவே, மேற்கண்ட பணியை முடிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 1.70 இலட்சம் ( ரூ. ஒரு இலட்சத்தி எழுபதினாயிரம் மட்டும்) ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலககுறிப்பு</u>**:

அ) மன்றம்அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினம் நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்..

இ) மேற்கண்ட பணி அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் ( பொ) அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.1947/2019/இ2)

**<u>தீர்மான எண்.1022 அனுமதிக்கப்பட்டது.</u>**

## <u>பொருள் 12</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட 33 வார்டுகளில் 16 இடங்களில் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகளை ஆகஸ்ட் –2019 முதல் ஜூலை –2020 வரை தொடர்ந்து பராமரிப்பு செய்யும் பணிக்கு 07.08.2019 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | M/s. MRP Corporation, மதுரை | 839000.00 | 0.84 % கூடுதல் |
| 2. | M/s. Hansa Treaders, மதுரை | 830100.00 | 0.22 % குறைவு |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.22 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s. Hansa Treaders, மதுரை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**தீர்மான எண்.1023 அனுமதிக்கப்பட்டது.**</u>

## <u>பொருள் 13</u>:

தேனி–அல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண்.07 வி.எம். சாவடித்தெரு அங்கன்வாடி மையம் அருகில் உள்ள பழுதுடைந்த குடிநீர் மேல்நிலைத்தொட்டி , வார்டு எண்.25 பழைய டி.வி.எஸ். சாலையில் மாரியம்மன் கோயில் வளாகத்தில் உள்ள பழுதுடைந்த மேல்நிலைத்தொட்டி, மற்றும் வார்டு எண். 1 பஜார் தெரு உள்ள மேல்நிலைத்தொட்டி ஆகியவைகளை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கு 07.08.2019 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திரு.M.முகம்மதுசலீம் ஒப்பந்ததாரார், தேனி | 148048.70 | 0.04 % குறைவு |
| 2. | திரு. P.முருகேசன் , ஒப்பந்ததாரார், தேனி | 153784.32 | 3.82 % கூடுதல் |

**அலுவலககுறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் 0.04 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திரு.M.முகம்மதுசலீம் , ஒப்பந்ததாரார், தேனி, அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.1947/2019/இ2)**

**தீர்மான எண்.1024 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 14:

தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான மேற்குச்சந்தையிலுள்ள நாய் கருத்தடை கூடத்தினை பயன்பாட்டில் கொண்டு வரும் பொருட்டு, மேற்படி ஆடுவதைக் கூடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளாக மின் பணிகள், தண்ணீர் வசதி, கூடுதலாக கழிப்பறை கட்டுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2.20 இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்..
2) மேற்காணும் பணிக்கான செலவினத்தை இந்கராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   **(ந.க.எண்.2067/2019/இ1)**

**தீர்மான எண்.1025 அனுமதிக்கப்பட்டது.**

## பொருள் 15:

தேனி – அல்லிநகரம் நகராட்சி உட்பட்ட வார்டு எண். 11 பாத்திமா தியேட்டர் சாலை சந்திப்பில் உள்ள பொதுக் கழிப்பிடத்தில், ஏற்கனவே பொருத்தப்பட்டிருந்த Water Closets, கதவுகள், தரைகள், தண்ணீர் தொட்டி மற்றும் சுவரில் பதிக்கப்பட்டுள்ள Tiles ஆகியவைகள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அதனை சீர் செய்யும் பொருட்டு பணிகள் செய்ய வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2.50 இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1) மன்றம் அனுமதிக்கலாம்..
2) மேற்காணும் பணிக்கான செலவினத்தை இந்கராட்சியின் பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
   **(ந.க.எண்.2066/2019/இ1)**

**தீர்மான எண்.1026 அனுமதிக்கப்பட்டது.**

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்(பொ)**
தேனி-அல்லிநகரம் நகராட்சி.